
மலர்:01 ஜனவரி-2013 இதழ்:01

# கழுகு

# Eagle



## கர்த்தாவே எங்களுக்கு துணை நில்லும்!

தனிப்பிரதி ரூ.30/=

# உங்கள் சகோதரனிடமிருந்து.....



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் புதுவருட வாழ்த்துக்கள்! இந்த புதிய ஆண்டில் கர்த்தர் எமக்கு தந்த தரிசனத்தின்படி இந்த சஞ்சிகை ஊழியத்தை மிகுந்த நெருக்கடிகள் மத்தியில் தேவனைப்பற்றும் விசுவாசத்துடனே ஆரம்பித்ததையிட்டு கல்வாரி கழுகுகள் சார்பாக நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

"கழுகு" என்ற இந்த சஞ்சிகை ஒவ்வொரு மாதங்களிலும் வெளியிட நாம் வாஞ்சித்தாலும் எமது பொருளாதார நிலமை 3 மாதங்களுக்கொருமுறை என மட்டுப்படுத்தியுள்ளது. ஆனாலும் எமது திருச்சபை வாலிப ஊழியமானது புதிய ஒரு பரிமாண வளர்ச்சி அடைந்துள்ளமை எம்மை உற்சாகப்படுத்துகிறது.

புதிய வருடத்தில் தேவன் எனக்கு கொடுத்த செய்தியை சிறப்பு செய்தியாக கொடுத்துள்ளேன். வாசித்து அதன்படி நடந்து தேவ ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள்

இந்த சஞ்சிகையை வெளியிட தேவன் எமக்கு ஒரு தரிசனத்தை தந்தார். எமது திருச்சபை தலைமை ஊழியர்கள் எம்மை உற்சாகப்படுத்தினர். உங்களாலான உதவிகளை செய்து இந்த ஊழியத்தை தொடர்ந்து செய்ய எமது கரங்களை தாங்குங்கள்! தேவன் ஒருவருக்கே சகல கனமும் துதியும் மகிமையும் உண்டாவதாக!

கிறிஸ்துவின் பணியில்,

உங்கள் சகோதரன்,

சகோ. ச.கஜேந்திரன் (விக்ரம்)

# கழுகுகளின் ஊழியங்களின் சில காட்சிகள்





**கல்வாரி அன்பினால்
வன்னி மக்களுக்கு வாலிபர்களினால்
நிவாரணம் வழங்கப்பட்டது
அதன் போது எடுக்கப்பட்ட
காட்சிகள் சில**











2012 - முதலாவது வாலிபர் ஒன்றுகூடல்





கிளாலியில் ஒருநாள் ஒன்றுகூடல்







ஒருநாள் உபவாச ஜெபம்









குடத்தனையில் இடம்பெற்ற
சுவிசேஷ கூட்டம்

# வாழ்த்து செய்திகள்

## தலைமைப் போதகர்,

வாலிபர்கள் ஓர் சபையின் முதுகெலும்பு. ஓர் மனிதனின் சரீரத்தை உறுதியாகவும் நேராகவும் வைத்திருப்பதற்கு முதுகெலும்பு முக்கியமானது. கர்த்தர் எமது திருச்சபைக்கு கொடுத்த வாலிபர்கள் எமக்கு கிடைத்த பொக்கிசம் என்பதை சொல்வதில் மகிழ்சியடைகிறேன். இந்த வாலிபர்கள் எமது சபையின் ஊழியங்களையும் பலவிதமாக ஆசீர்வதித்து வளர்ச்சிக்கு உதவியாக இருந்திருக்கிறார்கள். எமது வாலிபர்களுக்கு கழுகுகள் என்று பெயர். எமது வாலிபர்கள் பரலோக தரிசனத்தையுடையவர்களாக கொலோ.3:1ல் சொல்லப்பட்டபடி ஆமல் நோக்கிய தரிசனத்தின் படி இருக்கிறார்கள் என்பதை அவர்களது சிந்தனை செயல்கள் வெளிப்படுத்துகின்றன. எனவே எமது வாலிபக் குழவுக்காக கர்த்தருக்கு நன்றி சொல்லி கல்வாரி கழுகுகள் உயரப் பறப்பார்களாக என்று வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

**போதகர்.லெஸ்லி மத்தியுஸ்**

## நிறைவேற்றுப் போதகர்,

பிரியமானவர்களே எமது திருச்சபை வாலிபர்கள் 2013ல் ஆரம்பிக்கின்ற கழுகு என்கின்ற சஞ்சிகை ஊழியத்தை வாழ்த்தி ஆசீர்வதிப்பதில் பெருமகிழ்சியடைகிறேன். இந்த சஞ்சிகையின் மூலம் ஆத்துமாக்கள் சந்திக்கப்படவும் விசுவாசிகள் தேற்றப்படவும் வாலிபர்கள் கட்டியெழுப்பப்படவும் கர்த்தர் கிருபை செய்வாராக.

உனக்கிருக்கும் இந்த கொஞ்ச பலத்தோடு போ ஏனென்றால் உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்ற தேவவார்த்தையைக் கூறி கல்வாரி கழுகுகளை வாழ்த்தி ஆசீர்வதிக்கிறேன்.

**போதகர்.வீ.கனகராஜா**

# சிறப்பு செய்தி

**"எங்கள் தேவனாகிய கர்த்தாவே, எங்களுக்கு துணை நில்லும்"**

ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி கூப்பிட்டு: "எங்கள் தேவனாகிய கர்த்தாவே எங்களுக்கு துணை நில்லும்"
**2நாளாகமம் 14:11**

பிரியமான தேவனுடைய பிள்ளைகளே **2012** ம் ஆண்டு **11**ம் மாதம் ஒரு ஞாயிறு ஆராதனையில் கர்த்தரை துதித்துக்கொண்டிருக்கும் போது, கர்த்தர் இந்த வார்த்தையை தந்தார்! **2013** ம் ஆண்டில் கர்த்தரிடத்தில் நாம் கேட்க வேண்டியதெல்லாம் இதுதான்: எங்கள் தேவனாகிய கர்த்தாவே எங்களுக்கு துணை நில்லும். கர்த்தருடைய துணையில்லாமல் **2013** ம் ஆண்டில் எம்மால் நிலை நிற்கவே முடியாது. ஆசா கர்த்தரின் துணையை கேட்டான். ஜெயம் பெற்றான்.

## 1. கர்த்தருடைய பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதை செய்த ஆசா (2 நாளாகமம் 14:2)

பிரியமானவர்களே ஆசா தன் தேவனாகிய கர்த்தருடைய பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதை செய்தான். அதனாலே கர்த்தர் யுத்தத்தில் அவனுக்கு துணை நின்றார்.

ஆசா விக்கிரக வழிபாட்டை தடைசெய்து அழித்தான், கர்த்தரை ஜனங்கள் தேட செய்தான், நியாயப்பிரமாணத்தை கற்றுக்கொடுத்தான்.

பிரியமானவர்களே நாமும் இந்த புதிய ஆண்டிலே கர்த்தருடைய பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதை செய்வோம். கர்த்தர் இந்த ஆண்டிலே எமக்கு துணை நிற்பார்.

2 நாளாகமம் 14:5-7 - **ஆசா தேவனுக்கு முன்பாக செம்மையாய் நடந்துகொண்டான். தேவன் அவன் காலத்தில் யுத்தங்களை நீக்கி அவனை இளைப்பாறப்பண்ணினார். தேசம் சமாதானமாயிருந்தது. அவன் அரணிப்பான பல பட்டணங்களை கட்டினான்.**

2 நாளாகமம் 14:7 - கர்த்தரை தேடினால் கர்த்தர் எமக்கு இளைப்பாறுதலை கட்டளையிடுவார். ஆசா தேவனை தேடினான். கர்த்தர் அவனுக்கு இளைப்பாறுதலை கட்டளையிட்டார்.

## 2. கர்த்தரை துணைக்கு அழைத்த ஆசா (2நாளாகமம் 14:11)

ஆசாவுக்கு இருந்த பராக்கிரமசாலிகளின் எண்ணிக்கை ஐந்து இலட்சத்து எண்பதினாயிரம் பேர். அவனுக்கு எதிராக எத்தியோப்பியனாகிய சேரா பத்து இலட்சம் படைகளோடும் 300 இரதங்களோடும் வந்தான். ஆசா பயப்படவில்லை. தன் தேவனாகிய கர்த்தரை நோக்கி: எங்கள் தேவனாகிய கர்த்தாவே எங்களுக்கு துணை நில்லும் என கூப்பிட்டான். 2 நாளாகமம் 14:12 - கர்த்தர் அவன் கூப்பிடுதலுக்கு செவிகொடுத்து எத்தியோப்பியரை ஆசாவுக்கு முன்பாக முறியடித்தார். அவர்கள் ஓடிப்போனார்கள்.

பிரியமான தேவனுடைய பிள்ளையே உனக்கு எதிராக எத்தனை பேர் வந்தாலும் பயப்படாதே! யாத்திராகமம் 14:14 - கர்த்தர் உங்களுக்காக யுத்தம்செய்வார். நீங்கள் சும்மாயிருப்பீர்கள். கர்த்தர் பேரில் பற்றுதலாயிரு! கர்த்தரை நோக்கி கூப்பிடு! அவரே உனக்கு துணை நிற்பார்.

இந்த புதிய வருடத்திலே எப்படி என் வாழ்க்கை போகப்போகிறது? என் குடும்பத்தின் நிலை என்ன? என்னுடைய எதிர்காலம் என்ன? நான் என்ன செய்யப்போகிறேன்? எனக்கு ஏன் தோல்வி? நான் ஏன் ஏமாற்றப்பட்டேன்? என்று பலவாறு உன் மனம் அங்கலாய்த்துக் கொண்டிருக்கலாம்! இதை வாசித்துக்கொண்டிருக்கிற உனக்கு கர்த்தர் சொல்கிறார்: நான் உனக்கு துணை நிற்கிறேன். நீ பயப்படவேண்டிய அவசியமில்லை. கலங்க வேண்டிய அவசியமி . அவரிடத்தில் சரணடைந்துவிடு.

இந்த வருடத்தில் நீ சந்திக்கப்போகும் எல்லா சவால்களின் மத்தியிலும் "கர்த்தாவே எனக்கு துணை நில்லும்" என தேவாதி தேவனை நோக்கி கூப்பிடு அவர் உன் கூப்பிடுதலை கேட்டு உன்னை எல்லா இக்கட்டிலிருந்தும் நீங்கலாக்கி விடுவிப்பார். மனிதர்களின் துணையை நம்பி வாழ்ந்த நாட்கள் போதும். மனிதன் மாறிப்போவான். மாறாதவர் நம் கர்த்தர். நம் சுய பெலத்தால் ஒன்றும் செய்ய முடியாது. அவருடைய துணை மட்டும் எமக்கு போதும். வேறொன்றும் வேண்டாம் இந்த உலகத்திலே.

அன்றைக்கு ஆசாவுக்கு துணை நின்ற தேவன் உனக்கும் துணை நிற்பார். எனவே இந்த புதிய ஆண்டில் கர்த்தருடைய பார்வையில் நன்மையும் செம்மையுமானதை செய்யுங்கள். கர்த்தர் உங்களுக்கு துணை நிற்பார். ஆமேன்.

**"கர்த்தாவே, எங்களுக்கு துணை நில்லும்"**

## சிந்திக்கும் காலம்
## செயல்படும் நேரம் இது ..! இது !

ஆண்டாண்டு காலம் ஆலயம் சென்றேன்! தேவனின் ஆலயமாக வாழ்கின்றேனா?

ஆரவாரமாய், ஆனந்தமாய் ஆராதிக்கின்றேன் என் வாயின் வார்த்தையால், என் வாழ்வின் நற்பண்புகளால் இயேசுவை மகிமைப்படுத்துகின்றேனா?

வேதத்தை தினம் தினம் வாசிக்கின்றேன் அவர் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவர் வழியில் நடக்கின்றேனா?

எத்தனை அழகாய் பலர் புகழ ஜெபிக்கின்றேன் ஜெபிக்கும் ஜெபங்களுக்குப் பதில் பெற்றுக்கொள்கின்றேனா???

தேவன் செய்த நன்மைகளை சாட்சியாய் சொல்கிறேன். மனிதர் மத்தியில் சத்தியத்தின் சாட்சியாய் வாழ்கின்றேனா????

ஓடியோடி ஊழியம் செய்கின்றேன். உண்மையாய் சத்தமாய் தேவ சித்தம் தான் செய்கின்றேனா????

காணிக்கையை அதிகமாய் கொடுக்கின்றேன் கர்த்தருக்காக கனி கொடுக்கின்றேனா?

மனமே!!!!!!!!

மக்களை மகிழ்விப்பதை மறந்து விடு. மறைந்திருக்கும் ஆன்மாவிற்கு மகிழ்ச்சி கொடு.

சத்தியத்தை அறிவோம் சடங்காச்சாரத்தை மறப்போம். சத்தியத்திற்காக வாழ்வோம்.

சத்தியத்தை அறிவீர்கள்: சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.
யோவான். 8:32

**திருமதி.சாந்தி மத்தியுஸ்**







வாலிபர் பாசறையின் கலை
நிகழ்வின் போது





துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் வெற்றி பெற்று சம்பியனாகிய போது










23-12-2012 யாழ்.தொழில்நுட்பக்கல்லூரி மைதானத்தில் கழுகுகள்
நடாத்திய "விண்பனி" கிறிஸ்மஸ் சிறப்பு நிகழ்ச்சியின் போது



17.12.2011 அன்று நடைபெற்ற “உனக்கொருவர் இருக்கிறார்” வாலிபர் நிகழ்வின் சில காட்சிகள்



20.12.2011 – 24.12.2011 கரோல் நிகழ்வின் காட்சிகள்

## இரட்சிப்புக்கான ரோம பாதை

ரோமர் 3:10 நீதிமான் ஒருவனும் இல்லை.
ரோமர் 3:23 எல்லோரும் பாவிகள்.
ரோமர் 6:23 பாவத்தின் சம்பளம் மரணம். தேவனின் கிருபை வரமோ இயேசுக் கிறிஸ்துவினால் உண்டாகும் நித்திய ஜீவன்.
ரோமர் 5:8 தேவன் எம்மை நேசிக்கிறார். அதனால் இயேசுவை அனுப்பினார்.
ரோமர் 10:9-10 - இந்த வார்த்தைகளை முழு இருதயத்தோடு நம்பி தேவன் இயேசுவை உயிர்த்தெழபண்ணினார் என உன் வாயினால் அறிக்கையிட்டால் இரட்சிக்கப்படுவாய்.

## வாழ்விலிருந்து வாழ்வுக்கு...

### லிடேஷியான்

**2000** மற்றும் **2001** காலப்பகுதியில் சீனாவின் இரகசிய சபைகளின் தலைவராக போதகர் லீ கடமையாற்றினார். இரகசிய சபைகளின் செயற்பாடுகளால் இவர் அடிக்கடி கைதுசெய்யப்பட்டார். அவர் சபைக்கு செல்லும் ஒவ்வொரு தடவையும் தான் கைது செய்யப் படலாம் என எதிர்பார்த்தே சென்றார். இதனால் அவர் வெளியே செல்லும் போதெல்லாம் சிறு பையில் தனது போர்வையையும் ஓர் சோடி மாற்று உடுப்புக்களையும் எடுத்துச் செல்வார். இவர் பல தடவைகள் கைது செய்யப்பட்டார். ஓர் முறை லீயின் முகத்தில் அவரது சொந்த வேதாகமத்தாலே பொலிசார் அறைந்தனர். கிறிஸ் துவை அறிவித்ததின் நிமித்தம் அடித்து துன்புறுத்தப்பட்டார். தான் பிடிபட்டால் தனக்கு துன்புறுத்தல் ஏற்படும் என்று அறிந்தும் தொடர்ந்தும் கிறிஸ்துவை அறிவிக்கின்றார். அவர் எப்போதும் வைத்திருக்கும் சிறிய பை அவர் எப்போதும் கிறிஸ்துவின் நிமித்தம் பாடுபட ஆயத்தம் என்பதை வெளிக்காட்டுகிறது. நற்செய்தியை அறிவிப்பதற்கு அவர் எந்தக் கிரயமும் செலுத்த ஆயத்தமாக இருக் கிறார்.

**நானும் நீயும் ஆயத்தமா?**

இக் "கழுகு" சஞ்சிகையானது தொடர்ந்தும்
வெளியிடுவதற்கு உதவியாக உங்கள் ஜெபத்தினாலும்
பண உதவியாலும் தாங்குங்கள்

உங்கள் ஆக்கங்களை
எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.




தொடர்புகளுக்கு:
0779907129
svikram4230@yahoo.com

## எங்கள் முகவரி:

"கல்வாரி கழுகுகள்"
89, பிறவுண் வீதி,
த.பெ.இல-02
கொக்குவில், யாழ்ப்பாணம்
இலங்கை.

## Our Address:

"Calvary Eagles"
89, Brown Road,
Po.Box.No-02
Kokuvil, Jaffna
Srilanka.